# பிச்சைக்காரி

ப. கண்ணன்

S. G. RENGASWAMY
MADRAS-4

திராவிடமணி … ப்பகம்
தெப்பக்குளம் : : …ச்சிராப்பள்ளி

முதற்பதிப்பு
ஜூன் 1949

24733

பதிப்புரிமை

# பதிப்புரை

சிறு கதைச் சிற்பிகளில் ஜலகண்டபுரம் தோழர் ப. கண்ணன் தலை சிறந்தவர். அவரின் கற்பனையில் தோன்றிய கதை - கவிதைகள் பல, வானொலி நிலையத்திலும், திரைப்பட உற்பத்திச் சாலைகளிலும் புகழிடம் பெற்று விளங்குகின்றன. 'பிச்சைக்காரி'யும் தோழர் கண்ணன் அவர்களின் கற்பனையில் கருத்தாழம் கொண்டவை. எனவே பதிப்பகத்தின் முதல் 'நாவல்' வெளியீடாக கொணர்வதில் நமக்கும் மகிழ்ச்சி !

விலை 3 அணு

# பிச்சைக்காரி

"சாமி; சாப்பாடு கண்டு மூணு நாளாச்சு, கொஞ்சம் தயவு பண்ணக்கூடாதா?" என்று கெஞ்சினள் அந்த பிச்சைக்காரி. அய்யருக்கு அசாத்திய கோபம் வந்து விட்டது.

"சீ! கழுதை! நான் சொல்வது காதில் விழுகிறதா பார்; சிரார்த்தம் செய்யும் நாளில் உங்களுக்கு எந்த மடையன் சோறு போடுவான்? வயித்துக்கில்லாவிட்டால், ஒரு குளம் குட்டைகூடவா இல்லே விழுந்து சாக! பிச்சைக் காரச்சனியன்கள்!" என்று சொல்லிக் கதவைத் தடா ரென்று சாத்திக்கொண்டு உள்ளே சென்று விட்டார் அந்த அய்யர்.

அவள் வதனத்தில் கொஞ்சநஞ்சம் ஊசலாடிக் கொண்டிருந்த நம்பிக்கையும் மறைந்தது. கண்களில் ஒளி மங்கியது. பெருத்த ஏமாற்றத்துடன் மெதுவாகப் பின் னல் நகர்ந்தாள். தள்ளாடிக் கொண்டு கீழே விழப் போனவள் சுதாரித்துக்கொண்டு நின்ருள். அவள் என்ன நினைத்தாளோ? பரிதாபகரமாக வானத்தை அண்ணாந்து நோக்கினள். அவள் கண்களிலிருந்து இரண்டு நீர்த் தாரைகள் புறப்பட்டு அவள் ஒட்டிய கன்னங்களில் வழிந்து ஓடின.

தெருவோடு போய்க்கொ[illegible]ந்த நான் இவைகளை கவனிக்கும்படி நேர்ந்து விட[illegible], என் மனதை வாள் கொண்டு அறுப்பதுபோலிரு[illegible] அந்தக்காட்சி. ஒரு கணம் அசைவற்று நின்றேன[illegible] பல யோசித்தேன்.

முடிவில் அவளை என் பின்னால் வரும்படிச் சொல்லிவிட்டு அடுத்த தெருவிலிருக்கும் என் வீட்டை நோக்கி நடந்தேன். என் மனைவியின் நல்ல குணம் அந்த பிச்சைக்காரியிடம் நான் கொண்ட இரக்கத்திற்கு இடையூறு செய்ய வில்லை. மாறாக அன்பை வளரச் செய்தது.

அவளுக்கு வயது 25தானிருக்கும். நல்ல முகம், ஒல்லியான தேகம். கந்தல் துணிகளால் தன் உடம்பை மறைத்துக் கொண்டிருந்தாள். முழங்கால் வரையில்; ஏன்? தேகமெங்குமே புழுதி படிந்துப்போயிருந்தது. எண்ணெயின் வாசனையைக்கூடக்காணமல் அவள் கூந்தல் சடைபிடித்துக் கிடந்தது. பொதுவாக அவள் ஒரு பிச்சைக்காரிக்கு வேண்டிய சகல அம்சங்களையும் பெறறு, பார்ப்பவருக்கு விகாரத் தோற்றத்தையளித்துக் கொண்டிருந்தாள்.

என் வீட்டுக்கு வந்தவுடன் அவள் நிலைமை சற்று மாறி விட்டது. என்னுடையவும் என் மனைவியுடையவும் பிரியத்திற்கு இசைந்து அவள் குளித்துக்கொண்டாள்; தலையில் எண்ணெய் தடவி வாரிக்கொண்டாள். பழைய கந்தல்கள் அகற்றப்பட்டு, என் மனைவியின் ஒரு சேலை அவள் உடம்பை அலங்கரித்தது. திருப்தியுடன் ஆகாரம் அருந்தினாள். அவள் தோற்றமே அடியோடு மாறிவிட்டது. அவளைப் பார்ப்பவர்கள் பிச்சைக்காரி என்று சொல்ல முடியாது.

எங்கள் அன்பை அவள் பெற்று விட்டாளென்றாலும் மிகவும் நாணமடைந்தாள். "இந்த பிச்சைக்கார நாய்க்கு இத்தனை உபசாரமா?" என்று அடிக்கடி அவளே சொல்லிக்கொள்வாள். அவள் முகத்தில் துயரமும் மகிழ்ச்சியும் தோன்றித் தோன்றி மறைந்தன.

அவள் என் வீட்டிற்கு வந்து நான்கு நாட்களாய் விட்டன. எங்கள் நிர்ப்பந்தத்திற்கு இசைந்துதான்

வீட்டில் தங்கியிருக்கிருள். அவள் வரலாற்றை யறிய வேண்டுமென்ற ஆசை என் மனதை கிள்ளியது. "அவளது வாழ்க்கையில் ஏதாவது விசேஷமிருக்க வேண்டும்." என்பது என் எண்ணம். அந்த எண்ணத்தை உறுதிப் படுத்தின அவளது கெளரவமான பேச்சும், நடவடிக்கைகளும்.

அன்று இரவு முற்றத்தில் ஒரு கட்டிலின் மீது நான் சாய்ந்து கொண்டிருந்தேன். என் மனைவி வீட்டுவேலைகளை கவனித்துக்கொண்டிருந்தாள். வானத்திலே சந்திரன் வெண் மலர்களைத் தூவிய வண்ணம் ஓடிக்கொண்டிருந் தான். என் எதிரே சற்று தூரத்திலே அவள் வந்து உட் கார்ந்தாள். முதலில் என் வார்த்தைக்கு அவள் சம்மதிக்க வில்லை. ஆயினும் பின்னுல் என்ன நினைத்தாளோ தெரிய வில்லை. அவள் தன் கதையை சொல்லத்தொடங்கினுள். நன்ருக நிமிர்ந்து உட்கார்ந்த வண்ணம் நான் கேட்டேன்.

"என் கதை பரிதாபகரமானது என்பதை நானிருந்த நிலைமையைக்கொண்டே நீங்கள் ஊகித்திருக்கலாம். நான் பிச்சைக்காரியான இந்த மூன்று வருஷங்களில், களங்கமற்ற மனிதாபிமானத்தோடு என்னை ஆதரித்தவர் களில் நீங்களும், உங்கள் மனைவியாருந்தான் முதன்மை யானவர்கள். எனவே உங்களிடம் நான் மறைப்பதென்ன விருக்கிறது? மறைப்பதால்தான் பயன் என்ன? நான் பிச்சைக்காரி!

பரமத்தி என்ற ஊரில் முதலியார் வகுப்பிலே நான் பிறந்தேன். பரமத்திக்குள் எங்கள் குடும்பம்தான் பெரிசு. அதிக செல்வமும், செல்வாக்கும் படைத்தது. என்னுடன் பிறந்த பெண்கள் இருவர்; ஆண்கள் மூவர். எல்லோருக் கும் நான்தான் மூத்தவள். என் பெற்ருேர்கள் பழைய காலத்து மனிதர்கள். அவர்களுக்கு "மதம்" என்பது

என்னவென்று தெரியாது. ஆனால் பழைய பழக்க வழக்கங்களிலும், சாதி, குலப் பெருமையிலும் பிடிவாதமுள்ளவர்கள். நான் இந்த நிலைமைக்கு வந்த காரணத்தில் அவர்களுக்கு ஒரு பங்கு இல்லாமற் போகவில்லை.

அப்பொழுது எனக்கு வயது 12. பள்ளிக்கூடத்தில் 6-வது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். அதே வகுப்பில் என்னுடன் படித்தான் சோணாசலம் என்னும் வாலிபன். அவன் செட்டியார் வகுப்பில் பிறந்தவன். ஏழையானாலும் மிகுந்த அழகன். கள்ளங்கபடு தெரியாதவன். அவனுடைய இனிய சுபாவம் வகுப்பிலுள்ள எல்லாரையும் விட என்னை அதிகமாக கவர்ந்து விட்டது. அவனில்லாத இடம் எனக்கு வெறும் பாழாகத் தோன்றியது. அவனுக்கும் என்னிடம் மிகுந்த பிரேமை. எங்கள் இருவருக்குள்ளும் சகல அம்சங்களிலும் ஒற்றுமை இருந்தது. எங்கள் அன்பு செழித்து வளர்ந்த கொடி விட்டுப்படர்ந்தது. ஒருவரையொருவர் மறக்க முடியாத நிலைமையை நாங்கள் அடைந்தோம். அந்தச் சமயத்தில் ஒருநாள் திடுமென்று "நீ பெரிய மனுஷியாய் விட்டாய். இனிமேல் வீட்டை விட்டு வெளியே போகப்படாது" என்று சொல்லி என்னை வீட்டுக்குள் சிறைவைத்து விட்டார்கள் என் பெற்றோர்கள். எனக்கும் சோணாசலத்திற்கும் இடையில் ஒரு பெரிய சுவர் எழுப்பப்பட்டு விட்டது. எங்கள் சந்திப்பும் நின்றுவிட்டது.

மனச் சாந்தியில்லாமல் 5 வருடங்களைக் கழித்தேன், பிறகு என் கலியாணத்தைப்பற்றிய பேச்சு முளைத்தது. மாப்பிள்ளை ஒரு கண் பொட்டையாயிருந்தாலும் நல்ல அழகனென்றும், மாமன், மாமி, நாத்தனார் முதலியவர்களின் இம்சைக்கே வழியில்லையென்றும், அவனைக் கணவனாக அடைவதைக்காட்டிலும் வேறு பாக்கியமே உலகத்தில் இல்லையென்றும், எனக்கு உபதேசம் செய்யப்பட்டது.

அப்பொழுதெல்லாம் சோணாசலம் என்மனக்கண்ணில் தோன்றி வதைத்தான். என் நெஞ்சுக்குள் பெரிய கலக்கம். ஒரு நாள் என் தைரியத்தையெல்லாம் சேர்த்துப் பிடித்துக் துக்கொண்டு என் தகப்பனாரிடம் சொன்னேன்: "நான் சோணாசலத்தைக் கட்டிக்கொள்கிறேன்." என்று.

இதைக் கேட்டதும் அவர் ருத்ரமூர்த்தியாக மாறிவிட்டார். அவர் கண்கள் சிவந்து விட்டன. மீசை துடித்தது. "என்ன சொன்னாய்? அந்த செட்டிப் பையனையா கட்டிக் கொள்வாய்? தடிச்சிறுக்கி சரியான ஜாதி முதலியாருக்குப் பிறந்தவளாயிருந்தால், நான் சொன்ன மாப்பிள்ளையை மணக்கவேண்டும். இல்லையேல் நீ மடிந்து போனாலும் பாதகமில்லை. என் குலப் பெருமையை ஒருக்காலும் நான் இழக்க மாட்டேன்!" என்று ஆவேசத்துடன் கர்ஜித்தார் என் தந்தை. அதற்கு ஒத்து ஊதினாள் என் தாய். நான் என்ன செய்ய முடியும்? பெண் பேதை! பெட்டிப் பாம்பாக அடங்கி விட்டேன்.

கலியாண ஏற்பாடுகள் வெகு துரிதமாக நடைபெற்றன. முகூர்த்த நாளும் வந்தது. மணப்பந்தலில் அந்த லட்சாதிபதி மாப்பிள்ளையுடன் வீற்றிருந்தது, என்னை அக்கினிக் குழம்பில் தள்ளிவிட்டதைப்போலிருந்தது எனக்கு. நான் அழுதேன். கண்ணீர் பெருக்கினேன். மனமுருகி வாடினேன். ஏனென்று கேட்பதற்கு யாருமில்லை. கலியாணம் முடிந்ததும் என் கணவரோடு அவர் ஊருக்கு அனுப்பப்பட்டேன். என் சோணாசலத்தை மனத்தினாலன்றி கண்களால் பார்க்கும் பாக்கியத்தையும் நான் பெற்றேனில்லை.

என் கணவரின் வீடு ஒரு ஏழடுக்கு மாளிகை. நிலத்தில் விரிப்பது ரத்னக்கம்பளம். கதவுப்பிடிகள் போன்ற வஸ்துக்களெல்லாம் வெள்ளியில் தான். சோபா, நாற்காலி

கட்டில், முதலியவைகள் தந்தக் கடைச்சல்கள். சொல்ல முடியாத ஆடம்பரம். எனக்கு மாமன், மாமி, நாத்திகள் யாரும் கிடையாது. என் கணவர் தன்னிச்சையாக விடப் பட்டவர். எவ்வளவு ஆடம்பரமும், செல்வமும் இருந்ததோ, அவ்வளவுக்கு அவர் மனத்தில் உண்மை அன்புக்கும் நன்னடத்தைக்கும் மனிதாபிமானத்துக்கும் இடமில்லை.

சில வருடங்கள் அவருடன் வாழ்ந்தேன். அவ்வளவும் துன்ப வாழ்வு. என் முகத்தில் அழகு ஜொலித்துக் கொண்டிருந்த வரையில், கண்ணே, மூக்கே என்று கொஞ்சினர். என் தீராத மனக்கவலை உடலைப் பாதித்து என் உருவைக் குலைத்தது. அவ்வளவுதான். அவருக்கு நான் கசந்து விட்டேன். பரஸ்திரீகளை நாடவாரம்பித்தார். பல புதிய சகாக்களுடன் குடிப் பழக்கமும் சேர்ந்துக்கொண்டது. நாளாக ஆக பல பல பெண்களை பகிரங்கமாக வீட்டுக்கே அழைத்துவருவதும், சகாக்களுடன் கோலாகலமாகக் கொட்டமடிப்பதும், என்னை அவர்களுக்கு அடிமையாக வேலை செய்யச் சொல்வதும், செய்யா விட்டால் உதைப்பதுமான நிலைக்கு வந்து விட்டார். அவர் கண்களில் அப்பொழுது நான் ஒரு பெண்ணாகத் தோற்றவில்லை. பெண் பேயாம்! மதவெறியனுக்கும் குடிவெறியனுக்கும் வாழ்க்கையில் சம்மந்தமுண்டு என்பதை அப்பொழுது தான் நான் அறிந்தேன்.

அந்த சமயத்திலே ஒரு நாள் பகல் பொழுதில் வீட்டில் யாருமில்லை. தெரு வாசற்படியில் நான்மட்டும் தனியாக உட்கார்ந்து கொண்டு, என் விதியை நொந்து வருந்திக் கொண்டிருந்தேன். தெருவில் போய்க்கொண்டிருந்த ஒரு வாலிபன் அகஸ்மாத்தாக என்னைப்பார்க்கும் போது நானும் பார்த்து விட்டேன். என் உடம்பு அப்படியே சிலிர்த்துப்போய்விட்டது. மெய்மறந்தேன். "சோணாசலம்!" என்று என்னையறியாமல் கூவினேன்.

அவன் திக்பிரமை பிடித்தவன் போலச் சற்று நேரம் அசைவற்று நின்முன். பின்னர் மெதுவாக நானிருக்கும் இடத்திற்கு வந்தான். என்னைத் தொடர்ந்து வீட்டுக்குள்ளும் வந்தான். அவனிடம் என்ன பேசுவதென்றும் எனக்குத் தெரியவில்லை. பேசாமடந்தையாக விழித்துக் கொண்டு நின்றேன்.

" சண்பகம்; என்னை ஏன் அழைத்தாய்? வருஷக் கணக்காக சிரமப்பட்டு அடைந்த சிறிது மன நிம்மதியையும் கெடுப்பது உனக்கு தர்மமா?" என்று கேட்டான் மெலிந்த பார்வையோடு சோணசலம். அவன் கேள்வியின் அர்த்தம் அப்போது எனக்குப் புரியவில்லை.

வெகு சிரமத்துடன் நான் " நீ கலியாணம் செய்துக் கொண்டாயா?" என்று கேட்டேன்.

" கலியாணம் எனக்கா? நானேன் செய்து கொள்ள வேண்டும்? என் இருதயத்தின் ஆழத்தில் குடியிருந்து வரும், உன்னை அப்புறப்படுத்த சக்தியேது? உண்மையாகச் சொல்லுகிறேன். நீ எவ்வளவு தூரத்திலிருந்தாலும் மானசீக உலகத்தில் உன்னோடு வாழ்ந்துதான் வந்தேன். சண்பகம் நான் துரதிருஷ்டசாலி. கடைசியில் உன்னை நேரடியாகச் சந்தித்து விட்டேன்; நான் என்ன செய்யட்டும்? என் அறிவு மழுங்குகிறதே" என்று பரிதாபமாகக் கூறினன் சோணசலம்.

அவனது அன்பு தோய்ந்த இனிய வார்த்தைகள் என் மனதில் புகுந்து பெரும் சூராவளியை எழுப்பி விட்டன. அதே சமயத்தில் என் சொந்த நிலைமையை நினைத்தபோது நான் அப்படியே நடுங்கிப் போய்விட்டேன். எனவே தடுமாறிய குரலில் நான் சொன்னேன்.

"சோணசலம், வேண்டாம்; உன் அன்பு பரிசுத்த மானதாயிருந்தால் நீ இங்கிருந்து போய் விடு. மறுபடியும் என் கண்ணில் படவேண்டாம். நான் இப்பொழுது பிறன் மனைவி என்பதை மறந்து விடாதே!" என்று.

அவன் வெறித்து நோக்கினான். அந்தக் கண்களில் தோன்றிய அசாதாரண ஒளி என் மனதைக் குத்திக் கொன்றது. கரங்களால் முகத்தை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதேன். ஆ! மறுபடியும் நான் பார்த்த போது என் சோணசலம் அங்கிருக்கவில்லை. அவன் மகா உத்தமன். என்னைப் பெரிய அபவாதத்தி னின்றும் காப்பாற்றி விட்டான்.

ஆனால் நான் பாவி; மறைவென்ன? பூராவும் சொல்லி விடுகிறேன். அன்று மாலையே, என் கணவரால் அவர் சிநேகிதர் ஒருவருக்கு நான் பெண்டாளக் கொடுக்கப் பட்டேன். என்ன அநியாயம்! அந்தச் செயலுக்கு நான் சற்றும் இசைய வில்லை. மானத்தை உயிரினும் மேலாக மதித்தேன். கதறியழுதேன். அப்பொழுது என் கணவர் சொன்னார்.

"மத்தியானம் நானில்லாதபோது ஒரு தடிப்பயல் இங்கு வந்து உன்னிடம் கொஞ்சியது எனக்குத் தெரியா தென்று நினைத்துக்கொண்டாயா? அவனை விட என் நண்பன் கேவலமாய்ப்போய் விட்டானா? நான் உன் புருஷன். மரியாதையாக என் சொல்லுக்கு இணங்கிவிடு. இல்லாவிட்டால் இப்பொழுதே வீட்டை விட்டுத் துரத்தி விடுவேன்."

அந்தச்சொல்லம்புகள் என் மார்பைத் துளைத்து விட்டன. "இருப்பதா? போவதா?" என்ற கடும் பிரச்னைகள் என் மனதில் புகுந்து வாட்டியது. முடிவில் என் உள்ளத் தில் ஓங்கி நின்றது விடுதலையின் தாகம்; எனவே நான்

வீட்டை விட்டுத் தெருவில் துரத்தப்பட்டேன். அப்பொழுது நான் ஒரு அனாதை! எனக்கு உலகமே இருண்டு விட்டதைப்போலத் தோன்றியது. சற்று முன்பு தான் அபவாதத்தை விரும்பாத உத்தம மனைவியின் தன்மையை என் சோணாசலத்திற்கு உணர்த்தினேன். இப்போது அதே அபவாதத்தை ஏற்க மறுத்ததின் காரணமாக வீட்டை விட்டுத் துரத்தப்படுகிறேன். என்ன உலகம்! என்ன மனிதர்கள்!

என் புத்தி பெருங்கலக்கத்தையடைந்து விட்டது. இரவு 9-மணி வரையில், பிரமை பிடித்தவளாகத் தெருத் தெருவாயலைந்தேன். "மீண்டும் சோணாசலத்தைக் காண மாட்டோமா?" என்று தவித்தது என்மனம். அடுத்த விநாடி "உயிர் வாழ்வதாயிருந்தால்தானே அந்த யோசனை!" என்ற எண்ணமும் எனக்குத் தோன்றாமலில்லை.

இன்று போலத்தான் அன்று வானத்தில் வெண்ணிலவு காய்ந்து கொண்டிருந்தது. ஊரடங்கி விட்டது. மனம் போன போக்கில் நான் சென்று கொண்டிருந்தேன். காவிரியாற்றின் படித்துறையில் ஒரு குஞ்சுமில்லை. பாதங்கள் மட்டும் தண்ணீரில் நனையும்படியாக ஒருபடியின் மீது உட்கார்ந்தேன். "சோ" வென்ற சப்தத்துடன் ஆற்றில் புரண்டு செல்லும் கோடிக்கணக்கான அலைகள் என் இருதயத்தில் பிரதிபலித்தன. கைகளைக் கன்னத்தில் ஊன்றிக்கொண்டு குனிந்த வண்ணம் யோசித்தேன். பழைய சம்பவங்களெல்லாம் ஒன்றின் பின் ஒன்றாக ஓடி வந்தன.

"சிறு வயதிலிருந்து சோணாசலத்தினிடம் நான் கொண்ட தூய அன்பு, அதற்குக்கௌரவமளிக்கப் பெற்றோர்கள் மறுத்தது, சாதி வெறியும் பண வெறியும் பிடித்த தந்தையால் கட்டாய மணத்திற்கு பலியானது,

முன்பின்னறியாத லட்சாதிபதிக்கணவனால் பட்ட அவஸ்தைகள், தற்போது நானடைந்துள்ள நிலைமை, சோணாசலத்தை மறக்கமுடியாத எனது காதலின் வலிமை" இவைகளெல்லாம் என் உள்ளத் திரையில் தோன்றின. ஒரு நெடிய பெருமூச்சு விட்டேன். கடைசியாக "எதை நினைத்தும் பயனில்லை" என்ற முடிவுக்கு வந்தவளாய் எழுந்து நின்றேன். வாழ்வில் ஏற்பட்ட வெறுப்பு என் மனத்தை பயங்கரமான முடிவுக்குக் கொஞ்சங்கொஞ்சமாக இழுத்துக்கொண்டிருந்தது. எதிரிலே ஒரே அந்தகாரம்!

அதே சமயத்தில் பின்னாலிருந்து என் தோள்களின் மீது இரண்டு குளிர்ந்த கரங்கள் விழுந்தன. திடுக்கிட்டுத் திரும்பினேன். என் சோணாசலம் என்னை உற்றுப்பார்த்த வண்ணம் நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன். என் கண்களை நம்ப முடியவில்லை. என்னையறியாமல் என் உடல் புளகித்து விட்டது. சற்று முன்பு இருள் நிரம்பியிருந்த என் பாழும் மனத்தில் ஒரு புதிய ஒளி தோன்றியது! மீண்டும் வாழ்க்கையில் பற்றுதல்! நான் ஏன் சாக வேண்டும் என் சோணாசலம் இருக்கும் போது? என்று நினைத்தேன். இருவருமாக அந்தப் பால் நிலவில் காவிரியின் அகன்ற மணற்பரப்பிலே சென்று சோணாசலம் துன்பம் நிறைந்த தன் கதையைச் சொன்னான். அதைக் கேட்க என் மனம் உருகியது. அவன் மிகவும் இளைத்து வாடிப்போயிருந்தான். பிறகு நாங்கள் என்னென்னமோ பேசிக்கொண்டோம். அன்று இரவே இருவருமாக வேறு ஊருக்குப் புறப்பட்டு விடுவதென்று தீர்மானித்து விட்டோம். அதன்படி மறுநாள் காலை சட்டைநாதபுரம் என்ற ஒரு சிற்றூரை அடைந்தோம்.

அங்கு தனிக் குடித்தனம் நடத்தினோம். அப்பொழுது தான் எனக்கு வாழ்க்கையின் லட்சியத்தை உணர்த்தினார்

சோணுசலம். நாங்களிருவரும் சதிபதிகளாக வாழத்தான் படைக்கப்பட்டோம்; வாழ்ந்தோம். அந்த லட்சாதிபதி யின் ஏழடுக்கு மாளிகை எங்கள் சிறு குடிசைக்கு ஈடாகாது. தந்தக் கட்டில்கள், பஞ்சு மெத்தைகள், எங்கள் கோரைப்பாய்க்கு ஈடு செய்ய முடியாது. மகிழ்ச்சி நிறைந்த எங்கள் தனிப்பெரு வாழ்வு 2-வருஷங்கள் மகோன்னதமாக ஊர்ந்து சென்றது. எனது நல்லகாலமும் அவ்வளவுதான்.

நாள்பட்ட துயரத்தால் இருதயம் மெலிவுற்ற என் சோணுசலம், நோயுற்றுப் படுக்கையில் வீழ்ந்தார். எந்த சிகிச்சையும் பயன்தரவில்லை. இரண்டு மாதங்களில் அவர் முடிவெய்திவிட்டார். நான் மனமுடைந்துக்கதறினேன்; பைத்தியம்போல் பிதற்றினேன்; கீழே விழுந்து புரண்டேன்; மண்டையை உடைத்துக்கொண்டேன். என் சோணுசலம் எழுந்திருக்கவில்லை.

என் வாழ்க்கையின் அபிலாஷைகளையெல்லாம் சேர்த்துக் கட்டி அவர் சவக்குழியிலேயே அவருடன் புதைத்து விட்டேன். அதன் பிறகு என் இருதயம் வெறும் சூனியமாய் விட்டது. கணவன் வீட்டுக்கோ செல்ல என் மனம் இடந்தரவில்லை. நான் மரியாதையோடு வாழ வேண்டுமானுல் அவர்கள் ஊர்ப்பக்கமே போகலாகாதென்று தீர்மானித்துவிட்டேன்.

அப்பொழுது நான் அனுதை என்ற பதத்திற்கு இலக்கியமாக விளங்கினேன். மன நிம்மதியான இரண்டு வருஷ வாழ்க்கையின் மூலம், என் அழிந்துபோன இளமையைக் கொஞ்சம் பெற்றிருந்தேன். அழகு தலை தூக்கிப் பார்த்தது. எனவே பலர் என்மேல் கண்ணெறிவதையும் அறிந்தேன். அந்தச் சமயத்தில் ஒரு செல்வந்தரான பிராமணர் முன் வந்து, என்னைத் தன் வீட்டு வேலைக்

காரியாக அமர்த்திக்கொண்டார். வயிற்றுக்கு வேறு வழியில்லாமையால் நானும் சம்மதித்தேன். சாப்பாடு போட்டு ஏதோ சொல்ப சம்பளமும் கொடுத்து வந்தார்.

அவர் ஒரு மிராசுதார். பெயர் ரகுநாத அய்யங்கார். வயசு 30-க்குள் தானிருக்கும். அவர் அந்தப் பக்கங்களில் பிரக்யாதி அடைந்த ஒரு வைதிகசனுதன ஹிந்து. அவரது பேச்சுக்கள் அனைத்தும் பூர்வீக தருமசாஸ்திரங்களை அரண் செய்வதாகத்தானிருக்கும். பிராமணன் உயர்ந்தவன் என்பதை அணுவும் விட்டுக்கொடுக்க மாட்டார். அந்த அம்மாள் அதற்கு மேல். அவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள். அவர்கள் எல்லோருடைய கண்களிலும், வாயிலும், நான் நாலாவது சாதியான சூத்திரச்சி; வேசி மகள்; என்னைத் தொட்டு விட்டால் ஒட்டிக்கொள்ளுமாம் தீட்டு! நினைத்தால் வயிறு எரிகிறது.

சில மாதங்கள் விசேஷ நிகழ்ச்சிகளில்லாமல் நிகழ்ந்தன. ஆனால் அந்த அய்யங்கார் வரவர என்னைப்பார்க்கும் பார்வை ஒரு மாதிரியாக இருந்தது. எனக்கு மனதில் சந்தேகம். மற்றவர்கள் எதிரில் என்னை "பிள்ளே" என்றும் "அடியே" என்றும் கூப்பிட்டுவிட்டுத் தனிமையில் காணும்போது "சண்பகம்!" என்றால் நான் என்ன நினைப்பது? என் சந்தேகமும் பொய்க்கவில்லை.

அன்று இரவு அய்யங்கார் வீட்டில் எல்லாரும் கோவிலில் நடக்கும் ஒரு உற்சவத்திற்குப் போய்விட்டார்கள். நான் மட்டும் தனிமையில் வீட்டுக்காவலாக வாசல் திண்ணையில் படுத்துக்கொண்டிருந்தேன். கொஞ்ச நேரங்கழித்து அய்யங்கார் மட்டும் திரும்பி வந்தார். மள மள வென்று திண்ணையில் ஏறினவர் குனிந்து என் கையைப்பற்றித் தூக்கினார்.

"என்னசாமி?" என்று கேட்டேன் நான் கலக்கத்துடன். "உள்ளுக்கு வாயேன் சொல்லுகிறேன்" என்று சொல்லி என்னை அழைத்துச் சென்றார். வீட்டுக்குள் என் மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு அவர் பின்னல் சென்றேன். உள் சென்றதும், என் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு கொஞ்சும் குரலில் அவர் சொன்னார் "சண்பகம்! நான் சாதியில் பிராமணன், மேலும் உனக்கு எஜமானன் என்றாலும் இந்தச் சமயத்தில் நான் உன் அடிமை. உன் வடிவழகு என் மனதைக் கொள்ளை கொண்டுவிட்டது...........சம்மதித்தால் காசு பணத்திற்கு குறைவிருக்காது ..............." என்று. அவர் கண்களிலிருந்து கொட்டிய காமம், என் மனதில் மூண்டெழுந்த ஆத்திரம் என்னும் தீயைப் பெருக்கிற்று. "ரொம்ப அழகுதான்! பேசுவது நான் சூத்திரச்சி, தொட்டால் தீட்டு ஒட்டிக்கொள்ளும் என்று. நடவடிக்கையில் இப்படியா? மேலும் நான் அனுதையும், உங்கள் வேலைக்காரியும், என்பதினலேயே இந்த மானங்கெட்ட காரியத்துக்கும் இணங்க வேண்டுமா? இப்படித்தான் உங்கள் சாஸ்திரப்படிப்பு சொல்லுகிறதா? ஐயா! உமது நெஞ்சில் கொஞ்சங்கூட ஈவு, இரக்கமில்லையா? உங்களுக்குப் பெண்டு பிள்ளைகள் இருக்கத்தானே செய்கிறார்கள்! இந்த காரியம் அடுக்குமா?" என்று மிகுந்த படபடப்போடு கேட்டுவிட்டேன் நான்

அய்யங்காரின் மனதில் சுருக்கென்று தைத்துவிட்டன என் வார்த்தைகள். அவர் கோபமுழி முழித்தார். "ஏது! கெட்டவாயாடியாக இருப்பாய் போலிருக்கிறதே. மரியாதையுடன் இணங்கி விடுகிறாயா இல்லையா? அப்புறம் என் பண பலத்தையும் ஆள் பலத்தையும் உபயோகிக்க நீயே தூண்டியதாக ஏற்பட்டுவிடும். உன்னைப்போல எத்தனையோ சண்டிகளை நான் பார்த்திருக்கிறேன். முடிவு

பலாத்காரந்தான்; சீரழிந்து விடுவாய்; ஜாக்கிரதை!'' என்று மிரட்டினார் அவர்.

என் மனத்தில் கோபம் காட்டு வெள்ளம் போலப் புரண்டுக்கொண்டு வந்தது. அடக்க முடியாத ஆத்திரம்! "அடேய்; சண்டாளா; என்ன ஆணவம் உனக்கு? நாசமாய்ப்போனவனே; உன்னையும் பார்த்தேன், உன் எஜமான் தனத்தையும் பார்த்தேன். என் உயிர் போவதானாலும் இந்த வேலைக்கு நான் உடன்படப்போவதில்லை, தூ; மானங்கெட்ட மடையனே; நீயும் ஒரு மனிதனா?'' என்று ஆவேசத்துடன் அவன் முகத்தில் காரியுமிழ்ந்து விட்டு, அந்தவீட்டினின்றும் வேகமாக வெளியேறினேன். அவன் கண்களில் நெருப்புப்பொறிகள் பறக்க என்னை முறைத்துப் பார்த்தவண்ணம் நின்று கொண்டிருந்தான். என் அழிவு காலம் என்னை நிழல்போலத் தொடர்ந்து விட்டது.

அந்த இரவை ஊர்க்கோடியிலுள்ள ஒரு ஏழையின் சிறிய குடிசையில் கழித்தேன். பொழுது புலர்ந்தது. என் கவலை மிகுந்தது. அந்த ஊரில் அந்த மிராசுதார் அய்யங்காருக்குள்ள செல்வாக்கு எனக்குத் தெரியும். அவர் நாவசைத்தால் நடவாத காரியமில்லை. இப்பொழுது அவர் குணமும் தெரிந்துவிட்டது. "நாய்க்கு வேலையில்லை நிற்க நேரமில்லை'' என்பதைப்போல நெடுகச் சுற்றியலைந்தேன். இரவுக்குள் அடுத்த ஊருக்குச் சென்று விட வேண்டுமென்பது என் விருப்பம். "அவன் ஏதாவது கெடுதல் செய்து விடுவானோ'' என்ற பயம் என்னைப் பிடித்து உலுக்கியது.

அருணன் மலைவாய்க்குள் மறைந்துகொண்டிருந்தான். மெதுவாக இருள் எங்கும் படர்ந்தது. அந்த ஊரைத் தாண்டி சுமார் 4-பர்லாங்கு தூரத்தில் ரஸ்தாவில் வேகமாக நான் நடந்துகொண்டிருந்தேன். அந்தப் பாதையில் அப்பொழுதே ஜனப்புழக்கம் நின்றுவிட்டது. அந்தச் சமயத்திலே எங்கிருந்தோ திடீரென்று நான்கு முரடர்கள் வந்து

என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். நான் பயத்தால் கூச்ச லிட்டேன். ஒரு இரும்புக்கரம் என் கழுத்தை நெறித்தது. சப்தம் செய்தால் கொலை செய்யப்படுமென்று ஆயுதம் காட்டி பயமுறுத்தப்பட்டேன். க்ஷண நேரத்தில் என் வாயில் ஒரு துணிப்பந்தம் திணிக்கப்பட்டது. எனது கை கால்கள் கட்டப்பட்டன. நால்வரும் என்னைத் தூக்கிச் சுமந்துக்கொண்டு நடந்தனர். காட்டிற்குள் அப்பொழுது நானடைந்த மனவேதனையை என்னால் வருணிக்க முடியாது.

நன்றாக இருட்டிவிட்டது. நிர்மானுஷ்யமான காட்டில் ஒரு சிறு குடிசையில் நான் கிடத்தப்பட்டேன். ஒரு மங்கலான சிறு விளக்கும், ஒரு பாயும் தவிர அந்தக் குடிசையில் வேறு வஸ்துக்களில்லை. என் இருதயம் வேதனையால் நிரம்பியிருந்தது. "என்னை என்ன செய்வார்களோ?" என்பதை நினைத்துப் பார்த்தபோது என் உயிரில் பாதி போய்விட்டது. கட்டியிருந்த சேலை வியர்வையால் நனைந்து விட்டது.

சிறிது நேரங்கழித்து குடிசைக்கு வெளியில் ரகுநாத அய்யங்காரின் குரல் கேட்டது. பலர் 'குசுகுசு' வென்று பேசிக்கொள்வதையும் உணர்ந்தேன். எனக்கு விஷயம் நன்றாக விளங்கிப்போய்விட்டது. அந்தோ! என் மானத்தைக் குலைக்கச் செய்யப்பட்ட சதி; அய்யங்காரின் இச்சையைப் பூர்த்தி செய்விக்க மறுத்ததின் காரணத்திற்காக எனக்கு இடப்பட்ட கொடிய தண்டனை! நான் என்ன செய்ய முடியும்?

என் கை கால்கள் விடுவிக்கப்பட்டன. வாயில் அடைக்கப்பட்டிருந்த துணிப்பந்தும் எடுக்கப்பட்டது. அதே சமயத்தில் அய்யங்கார் உள்ளே நுழைந்தான் சிரித்த முகத்துடன்; என் வயிறு பகீரென்று பற்றி எரிந்தது.

“சாமி; நான் தப்பு செய்திருந்தால் மன்னிக்க வேண்டும். என்னை விட்டு விடுங்கள். உங்கள் காலைக் கட்டிக்கொள்கிறேன்” என்று கரம் கூப்பி கெஞ்சி மன்றாடினேன். அந்தக் கல்மனம் கரையவில்லை. ஏளனமாக அவன் உரக்கச் சிரித்தான். என் உயிர் அப்படியே துடித்துவிட்டது; பிறகு நடந்த பெரிய அக்கிரமத்தை, கோரமான காரியத்தை, அந்தோ! நான் எப்படிச் சொல்லுவேன்?..............

உயிரினும் மேலாக மதித்த என் மானம் நான் “பதறப் பதற”ப் பறி போய் விட்டது. அய்யங்கார் முதலான அங்கிருந்த 5-பேர்களும் மிருகத்தனமாக—மிகவும் கேவலமான இழிந்த முறையில் என்னை அனுபவித்தார்கள்! அப்பொழுது நானடைந்த வேதனையை என் வாயால் சொல்லத்தரமன்று; மனத்தால் நினைக்கவும் பயமாயிருக்கிறது. நான் உணர்ச்சியற்றுப் போனேன்; அவ்வளவு தான், அப்புறம் நடந்ததெல்லாம் எனக்குத் தெரியாது. ஆ! அப்படியே நான் செத்துப்போயிருந்தால் நான் எவ்வளவு பாக்கியவதி!

மீண்டும் எனக்கு சுயப்பிரக்ஞை வந்த போது நான் ஒரு ஆஸ்பத்திரியிலிருப்பதை உணர்ந்தேன். என் உடம்பில் பல புதிய வியாதிகளும், ரணங்களும் இடம்பெற்றிருந்தன. எனக்கு வேண்டிய சிகிச்சைகள் செய்யப்பட்டன. சட்டைநாதபுரத்திலிருந்து தருமபுரிக்குப் போகும் பாதையில் ஒரு புளியமரத்தினடியில் நான் சவம் போலக் கிடத்தப்பட்டிருந்தேனாம்; அந்த வழியாக மோட்டாரில் வந்த யாரோ ஒரு புண்ணியவான், என்னை அந்த ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து சேர்ப்பித்தாராம்; ஆஸ்பத்திரியில் நான் ஒரு அனாதை என்பதாக பதிவு செய்யப்பட்டிருந்தேன். ஆம்! பின்னே, “லட்சாதிபதியின் மனைவி” என்றா பதிவு செய்வார்கள்?

சுமார் 6-மாதங்கள் அங்கு அலங்கோலமாகக் கிடந்தேன். ஒரு மனித இருதயத்தில் எவ்வளவு துன்பங்களுக்கு இடமுண்டோ, அவ்வளவையும் பூரணமாகப் பெற்றிருந்தேன் நான். மகிழ்ச்சியோடு கொஞ்சங்கொஞ்சமாக நான் செத்துக்கொண்டிருந்தேன். ஆனால் அந்த பொல்லாத டாக்டர் என் சாவுக்கு முட்டுக்கட்டை போட்டு விட்டார். நான் செத்துப் போவதால் அவருக்கென்ன நஷ்டமோ தெரியவில்லை.

என் வியாதிகள் ஒரு முடிவுக்கு வந்தன; எலும்பையும் தோலையும் எனக்கு வைத்து விட்டு அவைகள் மறைந்து விட்டன. ஆஸ்பத்திரியினின்றும் நான் வெளியேற்றப் பட்டேன். எங்கு போவது? வயிற்றுக்கு வகையென்ன? பதில் தெரிய வில்லை. என்னை யாரும் வேலைக்கு வைத்துக் கொள்ளும் நிலைமையில் நானிருக்க வில்லை. இறந்துபோகும் மன உறுதியும் தளர்ந்து போய்விட்டது. அப்பொழுது தான் நான் பிச்சைக்காரி!

இந்த அய்யர் சொன்னார் "சிரார்த்தம் செய்யும் நாளில் உங்களுக்கு எந்த மடையன் சோறு போடுவான்" என்று. அது வைதிகச்சம்பிரதாயம். சாஸ்திரத்தின் கட்டளை. ஆனால் சட்டைநாதபுரம் மிராசு அய்யங்கார் இன்றைக்கும் ஒரு பெருமைவாய்ந்த வைதிகராகத்தான் இருக்கிறார் என்பதை இவர் அறிவாரா? இந்தப் புனிதர்கள்தான், வைதிகசனாதன இந்து மதத்தின் இரும்புத்தூண்கள். நான் பிச்சைக்காரி;" என்று சொல்லி முடித்தாள் அவள்.

என்மனதைப் பிளந்துக்கொண்டு எழுந்த ஒரு நீண்ட பெருமூச்சுடன் பின்பக்கம் திரும்பினேன். கண்களினின்றும் வழிந்த நீரைத்தன் முந்தானையால் துடைத்தவண்ணம் நின்றுகொண்டிருந்தாள் என் துணைவி.

---